நல்லூர் இளைஞர் நூலகம்

# "எமது தேசிய வாழ்வை மேம்படுத்தும் இலக்கில் கல்வித்துறை சீரமைக்கப்பட வேண்டும்"

தலைவர் பிரபாகரன்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 2 இதழ் 3

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14 - 02 - 1993




(யாழ்ப்பாணம்)

"எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித்துறை சீரமைக்கப்படவேண்டும்" இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்து நடத்திய பாராட்டுவிழாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வழங்கிய ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது!

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களில் அடிப்படையானது அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு தனி மனிதப் பிறவிக்கும் உரிமையுண்டு தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாக சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.

இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித்துறையை சிதைத்துவிட சிங்களப்பேரின

(4ம் பக்கம் பார்க்க)

# கேரதீவு - சங்குப்பிட்டி பாதை திறப்பு தொடர்பான அரசயோசனைபுலிகள்நிராகரிப்பு

## இளாலி தடையை நீக்குமாறு புதிய யோசனை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு-சங்குப்பிட்டி பாதையை பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடுவது தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரி ஊடாக சிறிலங்கா அரசு தெரிவித்துள்ள யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளார்கள்.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர் பாக நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இப்பேச்சுக்களின் போது இப்பாதை பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட

(4ம் பக்கம் பார்க்க)

## "தமிழரின் ஜீவாதாரம் கல்வி அதனை வளர்க்க வேண்டும்"

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

எமது இனத்தின் ஜீவாதாரம் கல்வி அதனைவளர்க்க வேண்டும், மேம்படுத்த வேண்டும். இதுதான் எமது கொள்கை இவ்வாறு நேற்று காலை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழப் பொதுக்கல்வித்தேர்வில் சிறப்புத் தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா நிகழ்ச்சியில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில் கல்வி ஒரு இனத்தின் அடிப்படை உரிமை இதனைத் திட்டமிட்டு உடைப்பதற்கு எதிரி முயல்கிறான். இதன் நோக்கம் பெரிய இனப்படுகொலை. கல்வி கற்கும் சுதந்திரம் அடிப்படை உரிமை கல்வி கற்கும் உரிமைக்கு பங்கம் ஏற்படாதவாறு போராளிகள் அணிதிரட்டப்பட வேண்டும்.

4-ம் பக்கம் பார்க்க)

## 62 மாணவர்களுக்கு தலைவர் கௌரவ பரிசு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் பரிசுகள் நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனால் வழங்கப்பட்டது.

மேற்படி தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற 62 மாணவர்களுக்கும் தமது கையொப்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ காவலரண் மீது வவுனியாவில் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் பலர் காயமடைந்துள்ளார்கள்.

வவுனியாவிலுள்ள மகாகச்சிக் கொடிக்குளம் - நாவற்குளத்துக்குமிடையே உள்ள இராணுவ காவலரண் மீது கடந்த ஞாயிறு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(வி-மி)

## 7லட்சம்கொப்பிகள் கப்பலில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

ஏழு லட்சம் அப்பியாசக் கொப்பிகள் அடுத்து வரும் கப்பலில் எடுத்துவரவிருப்பதாக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

((4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சூடு மாணவி பலி, பலர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதியில் இராணுவத்தினரால் மாணவி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 6ம் திகதிபாடசாலைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிராமசேவையாளர் நேர்முகப் பரீட்சை

(திருநெல்வேலி)

கிராம சேவையாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்த வடகிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் அடுத்த கப்ப

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் விமானத்தாக்குதல்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் விமானங்களிலிருந்து கடுமையான குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையக அதிகாரியை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது.

இச்சம்பவத்தினால் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இரு மாணவர்களுட்பட 12 பேர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

(சு-ரி)

## சட்டப்பேரவையை நேற்றும் இ. காங்கிரஸ் புறக்கணிப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்றும் சட்டப்பேரவையை புறக்கணித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப் பேரவைத் தலைவர் ஜனநாய

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சாகித்திய மண்டலப் பரிசு

1989 ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற நூல் - 200 க்கும் அதிகமான நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- (சி-7227)

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தர வாதத்துடன் குறித்த தவணையில் ஒடருக்கு சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை. நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார். மிருதங்க தொழில் நிலையம் 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-7224)

### ஜமுநாரம் பழம் தேவை

நல்ல முற்றிப் பழுத்த ஜமுநாரம்பழம் (தோடம் பழம்) கொள்வனவு செய்யப்படும். உங்கள் உற்பத்தி சிறிதளவாக இருப்பினும் 2 அல்லது 3 கிலோ கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் கீன் இன்டஸ்றீஸ் (தனி லிமிட்டெட்) 14, சினியர் லேன், யாழ்ப்பாணம் (ஏ-2877)

## கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கேணல்கிட்டுவும் ஏனைய போராளிகளினதும் வீரமரணத்தை ஒட்டி கண்டனக் கூட்டம் ஒன்று இன்று மாலை 7 மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச்சங்க முன்றலில் நடைபெறவுள்ளது. கேணல் கிட்டுவின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்படுவதுடன் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் உரையாற்றுவர். (வி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

புதிய அனுமதி
1991/92
(பௌதிக விஞ்ஞானம்)

### வெற்றிடங்களை நிரப்புதல்

மேற்படி பெயர்ப் பட்டியல் பரீட்சைக் கிளை, யாழ் பல்கலைக் கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

1990 ஆகஸ்ட், 1991 ஏப்ரல் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியுடையோர் நேரில் வந்து பெயர்ப் பட்டியலில் உங்கள் பெயர் காணப்படுமிடத்து, உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்

(ஏ 2879)

அகில இலங்கை

# இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

இடம்: **மன்ற கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்

**6-ம் நாள் 14-2-93 ஞாயிறு**

வட- இலங்கை சர்வோதயத்தினரின்
ஆதரவில்

## தியாகராஜ உற்சவம்

காலை 9 00 9-15 மங்கள விளக்கேற்றல்
திரு. ஆ. சிவரத்தினம் (சிற்பாசாரியார்)
திரு. ம. சிவலிங்கம் (வர்த்தகர்)
தலைவர்: கே. திருநாவுக்கரசு
(வட - இலங்கை சர்வோதயம்)
சிறப்புவிருந்தினர் க. கணேசமூர்த்தி
(மாவட்ட முகாமையாளர் இலங்கை வங்கி

காலை 9-30 - 11-00 மங்கள இசை

நாதஸ்வரம்:
கே. எம். பஞ்சாபிகேசன், என். கே. பத்மநாதன்
கே. ஆர். சுந்தரமூர்த்தி எஸ், எஸ். சிதம்பரநாதன்
வி. கே. கானமூர்த்தி, வி. கே, பஞ்சமூர்த்தி
என். கே. கணேசன் எம். பி. நாகேந்திரன்
எஸ். கேதீஸ்வரன், பி. ரஜி

தவில்;
கே. பழனிமலை, கே. ஆர். புண்ணியமூர்த்தி
கே. நித்தியானந்தன், ரி. உதயசங்கர், பி. ரவி
ஆர் எஸ் ரவீந்திரன், ஆர்.எஸ். சுதாகரன் பி கணேசன்
ஆர்.பாஸ்கரன், கே வீராச்சாமி. எஸ். ஜெயராமன்
பி. முருகதாஸ், எஸ். ராமதாஸ்

11-00 - 12-00 பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்
முதுகலைஞர்களும், இளங்கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

12-00 மதிய போசனம்

அன்று மாலை
யாழ். வர்த்தகசங்கத்தின் ஆதரவில்

## "தியாகராஜ கீர்த்தனுஞ்சலி"

மாலை 3-00 - 4-00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| கே. நாகராசா | என். கோகிலேஸ்வரன் |
| வி ஜெகந்நாதன் | எஸ். விஜயகுமார் |
| எம். நாராயணசாமி | எஸ். கண்ணன் |
| என். யோகநாதன் | எஸ். நடராஜசுந்தரம் |

4-00 — 4-45 பாட்டு
யசோதரா கந்தசாமி
வயலின்: பாக்கியலக்ஷ்மி நடராசா
மிருதங்கம்: எஸ. துரைராசா

4-45 — 5.30 பாட்டு வி. பரமசாமி
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

5-30 — 6-15 பாட்டு
பரமேஸ்வரி கணேசன்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

இரவு 6-15 — 6-30 மங்கள விளக்கேற்றல்
திரு. சு. செல்வரத்தினம், (விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்)
உரிமையாளர், "ஈஸ்வர பகவான்" (விண்ணன்)
திரு. த. வைத்திலிங்கம் (வர்த்தகர்)
தலைவர்: திரு. வி. சிற்சபேசன்
(தலைவர்: யாழ். வர்த்தகசபை)
சிறப்பு விருந்தினர்: திரு. க. குணராஜா
(யாழ். உதவி அரசாங்க அதிபர்)

6-30 — 7-15 பாட்டு எம். ஸ்ரீரங்கநாதன்
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

7-15 — 8-15 வில்லிசை
ஸ்ரீதேவி வில்லிசைக்குழுவினர் வழங்கும்
"சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்"

8-15 — 9-15 பரதநாட்டியம்
"நாட்டிய விசாரத" விக்னேஸ்வரி-சரவணமுத்துவும் மாணவிகளும்
நட்டுவாங்கம் - கிரிஷாந்தி, ரவீந்திரா
பாட்டு - சாரதா சச்சிதானந்தம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்

வாழ்த்துகிறோம்

**நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி மார்கட்.

(ஏ-2861)

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஜோசப்பாலா எழுதிய தரிசனம் சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை திரு. செம்பியன் செல்வன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை வண. இல்லறி ஜெயநேசன், யாழ். ஜெயம் ஆகியோர் நிகழ்த்த வெளியீட்டுரையை திரு. சுந்தரம் டிவகலாலா நிகழ்த்துவார். கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், திருமதி பி. எவ். சின்னத்துரை, திரு. என். சண்முகலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

0 0 0

யாழ். இலக்கியவட்டத்தின் இருபத்தாறுவது ஆண்டு நிறைவு விழாவும் இலக்கியப் பேரவையின் சிறந்த நூல்களுக்குமான பரிசளிப்புவிழாவும் இன்று காலை ஒன்பது மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும் இவ்விழாவில், எண்பத்தொன்பது, தொண்ணூறும் ஆண்டுகளில் எமது மண்ணில் வெளியாகிய ஏழுநூல்களுக்கு தலா ஆயிரம் ரூபா ரொக்கப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு நூலாசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். எட்டு நூல்களுக்கு தகுதிகாண் நிலையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்நிகழ்வுகளில் இலக்கிய பேரவை மூத்த எழுத்தாளரும் அறிஞருமான தி. ஈ. வரதராஜன் (வரதர்) பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார். (எஸ்)

0 0 0

(யாழ்ப்பாணம்)

புகைப்படக்கலை-அடிப்படை பயிற்சிநெறிதொகுதி1நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கலும் இன்று காலை 11 மணி முதல்12மணிவரை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா சான்றிதழ்களை வழங்குவார். அதனைத் தொடர்ந்து பொதுஅமர்வும், மதிப்பீடும் இடம்பெற்று நன்றியுரையுடன் நிறைவு விழா நிறைவு பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை வருடாந்தம் நடாத்திவரும் சமய பாடப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் சித்திபெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் இம்மாதம் 23ம் திகதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

அத்வைத வேதாந்த நிகழ்ச்சிகள் இன்று காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் நிலையத்தில், வைத்திய கலாநிதி திரு. வ. சின்னப்பு தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதி, திருவாசக மன்றத்தில் மெய்கண்டதேவர் ஆதீனச் சார்பில் ஞாயிற்றுக்கிழமைகளிலே பிற்பகல் 3 மணிக்கு திருவாசக ஞானவிளக்கத்தொடர் சொற்பொழிவுகளைத் திருவாசகமணி க. மாணிக்கவாசகர் நிகழ்த்துகின்றார். முதலாவது நிகழ்ச்சியை இன்று மாலை 3-00 மணிக்கு நாவலர் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வித்துவான் சைவப்புலவர் சி. வைத்தியலிங்கம் ஆரம்பித்து வைக்கின்றார்.

## இராசி பலன்

**14-02-1993**
**ஞாயிற்றுக்கிழமை**
**(தமிழுக்கு மாசி 3)**

அட்டமி பி.ப. 12-04வரை, அனுஷம் பி. இ. 1-24 வரை, மரணயோகம் இராகுகாலம் மாலை 5-73 முதல் 6-33 வரை சுபநேரம் காலை 9 33 முதல் 11-03 வரை.

மேடம்: கவனக் குறைவு, பொல்லாங்கு, காரியத்தடை.

இடபம்: மகிழ்ச்சிதரும் சம்பவம், விருந்து, தொழில் சிறப்பு.

மிதுனம்: அந்நியர் உதவி, இனிய உறவு, குடும்பசுகம்.

கடகம்: பயணத்தடை, மன உளைச்சல், மனக்குறை.

சிம்மம்: கெட்டசகுனம், தடுமாற்றம், அலைச்சல்,

கன்னி: சுகபோகம், தனவரவு, தெய்வீக வழிபாடு

துலாம்: குடும்பப்பகை, ஒதுக்கப்படல், அகால போசனம்.

விருச்சிகம்: பெண்வரவு, மங்கள காரியம், இனிய உணவு.

தனுசு: துயரச்செய்தி, அதிகயோசனை, மனவெறுப்பு

மகரம்: உறவினர் வருகை, திருமணயோகம், காரியசித்தி,

கும்பம்: பயன்தரும் சந்திப்பு, நற்செய்தி, சுப வார்த்தை.

மீனம்: கெட்ட சகவாசம், ஆவேசம், எதிரியினால் கேடு.

ஜோஸ்யர்

## அலவன்ஸ் அதிகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த அலன்வஸ் அதிகரிக்கப்பட்டுள்ளதாம்.

இதுபற்றிய சுற்றுநிருபம் ஒன்று நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தமிழ் ஆசிரியர் சங்க தலைவர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (சி)

# முல்லை - மணலாறு மாவட்டம் கடற்றொழில் சிறப்பிதழ்களுக்கான
# ஆக்கங்கள் கோரல்

"ஆதாரம்" இரு மாத வெளியீட்டின் 11ம், 12ம் இதழ்கள் முறையே முல்லை - மணலாறு மாவட்டம், கடற்றொழில் சிறப்பிதழ்களாக வெளிவர உள்ளன.

இச்சிறப்பிதழ்களுக்கு எமது சுயசார்புப் பொருளாதாரத்தை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான கட்டுரைகள், பேட்டிகள், படங்கள் போன்ற ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்கள் 3 பக்கங்களுக்கு மேற்படாமல் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டு, 'ஆதாரம்', முதன்மைச் செயலகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், தாவடி எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தமிழீழ**
**பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்**

(எ 2882)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பிறப்பு, இறப்பு, கல்யாண மூலப்பிரதிகள் பழுதடைந்தன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் பெரும்பாலான மக்களின் பிறப்பு, இறப்பு கல்யாண மூலப் பிரதிகள் பழுதடைந்து தொலைந்து போனதும் தெரியவந்துள்ளது.

இவ் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு, கல்யாண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற விண்ணப்பித்த அநேகமானவர்களுக்கு உங்கள் பத்திரம் பழுதடைந்துள்ளது அல்லது காணமல் போயுள்ளது கொழும்பு தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளின் முகவரிக்கு பதில் அனுப்பி வைக்கப்படுகின்றதாம்.

இதனால் புனர்வாழ்வு இழப்பீட்டுத் தொகை கடவுச்சீட்டு தேசிய அடையாள அட்டை போன்ற அத்தியாவசிய தேவைக்கு விண்ணப்பித்த பலர் மேற்படி பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்த பொழுது சூறுவளி காரணமாகவும் ஏனைய பல வேறு காரணங்களினாலும் மூலப்பிரதிகள் பழுதடைந்தும் காணமல் போயுள்ளதாகவும் பதிலளிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. 71 இ,

# தபால்களை அனுப்புமாறு அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில்வந்தகுமணக்கப்பலில் 220 தபால் பொதிகள் மட்டுமே எடுத்துவரப்பட்டமை பற்றியும் வெளிநாட்டுத் தபால்கள் எடுத்து வரப்படாமை பற்றியும் கொழும்பில் தேங்கியுள்ள தபால் பொதிகளை உடன் அனுப்பி வைக்குமாறு வடமாகாண அஞ்சல் நாயகம் திரு எஸ் எம் சேதுகாவலர் கேட்டுள்ளார்.

இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அவசர தந்தியொன்றை தபால் மா அதிபர் திரு. ஒஸ்மின் பெர்னண்டோவுக்கு அனுப்பியுள்ளார். (159 - இ)

# அகதிகள் எப்பகுதியிலும் குடியேற அரசு அனுமதி

(கொழும்பு)

படையினர் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் அகதிகள் குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அமைச்சு இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

அகதி முகாம்களில் உள்ள அகதிகள் விரும்பினால் யாது காப்புப்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத பகுதிகளிலுள்ள அவர்களது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேற அரசு அனுமதி வழங்கியுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு கிறிஸ்டி இலவா தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவினுள் களவாக ஒருலட்சம் ஆசியர் நுழைவு

(நியுயோர்க்)

அமெரிக்காவில் வருடாந்தம் ஒரு லட்சம் ஆசிய நாட்டவர்கள் கள்ளத்தனமாக குடியேறுவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பெரும்பாலும், சீன, ஹொங்ஹொங் நாடுகளைச் சேர்ந்தவர்களே கள்ளத்தனமாக அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்படுகின்றார்கள். இவர்களை இங்கு கூட்டி வருபவர்கள், லட்சக்கணக்கில் பணம் சம்பாதிப்பதாகவும் இதைக் கட்டுப்படுத்த அமெரிக்க அரசு தவறிவிட்டதாகவும் அந்தப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

அமெரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்றை அமெரிக்கக் கடற்படையினர் அண்மையில் நடுக்கடலில் வைத்து பரிசோதித்தபோது நூற்றுக்கணக்கான சீன நாட்டவர்கள் கள்ளத்தனமாக வந்து கண்டுபிடிக்கப்பட்டது இக்கப்பலில் பயணம் செய் குறிப்பிடத்தக்கது. (வி-சி)

# இனப் பிரச்னைத் தீர்வில் அரசு பின்வாங்கும்

(பெங்களூர்)

"இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இவ்வாண்டு இலங்கை அரசு பின்வாங்கும் தன்மையே காணப்படுகிறது."

இவ்வாறு பெங்களூரில் இருந்து வெளியாகும் 'அஸ்ரோலோஜிக்கல் மகஸின்' தனது வருடாந்த வெளியீட்டில் 'உலக நிலவரம்' என்ற தலைப்பிலான கட்டுரையில் தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசு இப்பிரச்னையைத் தீர்க்க, இந்த ஆண்டு வாய்ப்பில்லை எனவும் கூறியுள்ளது. (எஸ்-இ)

# இலங்கை மாணவர்களுக்கு இந்திய புலமைப் பரிசில்

(கொழும்பு)

இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்ள இலங்கை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன

மருத்துவம், பொறியியல், விவசாயம், மருத்துவமாணி ஆகிய துறைகளில் சுமார் 58 மாணவர்களுக்கு உயர் கல்விக்கான புலமைப் பரிசில் கிடைக்கும்.

ஒவ்வொரு புலமைப்பரிசில் காலமும் நான்கு ஆண்டுகள் முதல் ஆறு ஆண்டுகள் வரையானதாக இருக்கும்.

புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சொந்தப்பராமரிப்புச் செலவு, பரீட்சை வசூல் கட்டணங்கள், புத்தகங்கள், உபகரணங்கள், கல்விப்பிரயாணங்களுக்கான செலவினங்கள் வழங்கப்படும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மேற்குறிப்பிட்ட பாடத்துறையில் நான்கு பாடங்களில் சித்தியும் இவற்றில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் 19 முதல் 2 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை உயர் கல்வி அமைச்சு வெளிநாட்டு ஏஜென்சிக்கு அனுப்ப வேண்டும். (இ)

# நிதி வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தபால் நிலையங்களுக்கான நிதி, மக்கள் வங்கி ஊடாக வந்துள்ளது.

இந்நிதி, காசுக் கட்டளை, தபாற் கட்டளை, மாதாந்த உதவிப் பணம் என்பன வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இதனால் யாழ் மாவட்டத் தபாலகங்களின் நிதிப் பற்றாக்குறை ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (159-இ)

# சீருடை கிடைக்கவில்லை

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 11ம் ஆண்டுகளில் இரண்டாம் முறைபடிப்போருக்கும் 13ஆம் ஆண்டில் இரண்டாம் முறை படிப்போருக்கும் இலவச சீருடை வழங்காதது குறித்து மாணவர் மத்தியில் விரக்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (139)

# சிறிமாவுக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் வெகுதூரம் — பிரதமர்

(கொழும்பு)

பத்திரிகையாளர்களின் உரிமை பற்றி பேசுவதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு தார்மீக உரிமை கிடையாது.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கமே கருத்து சுதந்திரம் உட்பட மக்கள் அனுபவித்து வந்த ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரங்களையும் அப்பட்டமாக மீறியது என்றார். (இ)

# சடலங்களை எடுத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

ஆஸ்திரியாவிலிருந்து சட்ட விரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட வேளை மர்மமான முறையில் இறந்து கிடந்த 5 இலங்கை இளைஞர்களின் சடலங்களும் நாளை 15ம் திகதி இங்கு எடுத்து வருவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

# ஸ்ரான்லி வீதி பகுதிக்கு குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை நீர் வேலைப்பகுதி தொழில்நுட்ப ஊழியர்களினதும், உத்தியோகத்தர்களினதும் அயரா முயற்சியினால் ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லிவீதியின் இரு பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகம் இடம் பெற்று வருகிறது.

மின்சார வசதிகளற்ற நிலையிலும் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் திருநெல்வேலி பகுதியிலிருந்து இந்த நீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இத்தவேளை குருநகரில் ஒரு பகுதிக்கு சென் ஜேம்ஸ் தேவாலயதண்ணீர் தாங்கியிலிருந்து வண.பிதா இமானுவேல் அடிகளாரின் ஒத்துழைப்புடன் ஒரு சில தினங்களில் நீர் விநியோகம் நடைபெறும் என்றும் மாநகரசபை நீர் வேலைப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (நி)

# அகதிகளை அமர்த்த புதிய கொட்டில்கள்

(மன்னார்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் அகதிகளைத் தங்கவைப்பதற்கென, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் மன்னாரில் கொட்டகைகளை அமைக்கும் வேலையை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவிலிருந்து ஜனவரி மாதம் முதல் மீண்டும் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், இதுவரை அவர்களை அனுப்புவதற்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (157-கி)

# சம்பள உயர்வுக்கான வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1993ம் ஆண்டுக்கான சம்பள உயர்வுக்கான கடமைகள் யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சம்பள உயர்வின்போது ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இக்கடமைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இது விடயமாகத் தெளிவுபடுத்தும்படி யாழ்ப்பாண அரச அதிபர் கொழும்பு உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார் என்றும், அதன் அடிப்படையிலேயே இச்சம்பள உயர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சகல பிரதேசச் செயலகங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்பதால் குடாநாட்டின் சகல பிரதேசச் செயலர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் இதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன என்றும், 1993 பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் தை மாதச் சம்பள நிலுவைவும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (161-71-இ)

# மூக்கிலிருந்து சீறி வந்த குண்டு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் அரிசோனாவைச் சேர்ந்த ஓர் இளம் பெண் தன் காதலனுடன் காரை ஓட்டிச் சென்றார். பின்னால் வந்த வேறொரு காருக்கு வழி விடாததால் அந்தக் கார்க்காரருக்குக் கடும் கோபம் வர, அவர் துப்பாக்கியால் சுட்டதில் காதலனின் நெற்றியில் குண்டு பாய்ந்தது. உடனடியாக ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

ஆழமாக நெற்றியில் பாய்ந்த குண்டை டாக்டர்கள் எப்படி வெளியில் எடுத்து அந்த இளைஞனைக் காப்பாற்றப் போகிறார்கள் என்று எல்லோரும் பதைத்துக் கொண்டிருந்தபோது, அந்த இளைஞன் ஒரு தும்மல் தும்மினார். மூக்கிலிருந்து குண்டு எகிறி வெளியில் விழுந்தது. (இ)

# யாழ். மாநகர புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தம்

(திருநெல்வேலி)

1893 ம் ஆண்டிற்கான யாழ் மாநகர புனரமைப்பு வேலைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மாநகர சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்புனருத்தாரண அபிவிருத்தி வேலைகளைத் தொடர்வதற்கு யாழ். அரச அதிபர் ஊடாக அபிவிருத்தி முகவரிடம் இவ் வேலைகளை மேற்கொள்ளுவதற்கான நிதியுதவியை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டதற்கு இதுவரை நிதி அனுப்பப்படாமையினாலேயே இவ்வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (157-சி)

# இளநீரில் நீலம் கலந்த போலி மண்ணெண்ணை வியாபாரி நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

இளநீருக்குள் நீலத்தைப் போட்டு மண்ணெண்ணெய் என விற்பனை செய்த போலி மண்ணெண்ணெய் வியாபாரி ஒருவர் நேற்று கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

உரும்பராயைச் சேர்ந்த இந்த வியாபாரி யாழ். பஸ் நிலையத்திலுள்ள மண்ணெண்ணெய்க் கடையொன்றுக்கு இந்த போலி மண்ணெண்ணெயை விற்றபொழுது பிடிபட்டாராம். (எஸ்)

## எமது தேசிய வாழ்வை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதம் நீண்ட காலமாகவே முயன்று வருகிறது. இதன் விளைவாக எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இன கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களை தகர்த்துவிட எதிரி முனைகிறான். இனத் தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம் அதேவேளை எமது சமூக வாழ்விற்கு ஆதாரமான அமைப்புகள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே, இரு முனைகளில், ஒரேவேளையில போராடவேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இரு முனைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகிறோம் இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளை களைந்துவிடுவதிலும் நாம் நிதானமாக செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர்வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கிறது. அன்றொருகாலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கிறது. உயிர்ப்பலி கொடுத்து உயிர் வாழவேண்டியிருக்கிறது.

இன அழிவைத் தடுத்து, எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆக வேண்டும். போராடி வாழ்வதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒருபடைவேண்டும். இந்த விடுதலைப்படை இல்லாதுபோனால் எமது இனத்தின் அழிவை தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம் புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப் போர் என்பதால் சுய விருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைதுறந்து, தமது சொந்த வாழ்வின் சுபோகங்களை துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத்துறந்து, தமது மண்ணையும் மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றுளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப்போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்றவேண்டும். கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கற்கைநெறிக்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத்தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின்தேசிய கடமைப்பாடாகும்.

எமது இயக்கம் விடுதலைப் போரை முன்னெடுத்துவரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அதற்கான அமைப்புகளையும் கட்டி எழுப்பி வருகிறது.

காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தை திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசிய போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சியையும் அதன் ஆக்க பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம் பரம்பரைக்குக் கிட்டுவதற்கு வழிசெய்ய வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம் பெறவேண்டும். இந்த இலக்குகளை அடையும் வகையில் எமது அமைப்பான தமிழீழக் கல்விக்கழகம் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியை திட்டமிட்ட வகையில் அரசு புறக்கணித்து வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் போர் நடவடிக்கைகளும், பொருளாதார நெருக்குதல்களும் நிலைமையை மேலும் மோசமாக்கி வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவ சமூகம் கல்வியைக் கற்க வேண்டியிருக்கிறது. தமது ஆர்வத்தினாலும், திறமையினாலும், கடும் உழைப்பினாலும் கல்வி கற்றுப் பொதுத்தேர்வுக்குத் தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்துவிடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் க. பொ. த. சாதாரண தரத் தேர்வுக்கு ஈடாக, முதல் தடவையாக தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடத்தி முடித்திருக்கிறது. இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அத்துடன் இத்தேர்வில் தோற்றிய, தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ரி)

# கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட முதற்கட்ட நோயாளர்களை நாளை குமண கப்பலில் அழைத்துச் செல்வதற்காக அன்று காலை 6 30மணிக்குப் பிந்தாமல் யாழ். போதனா வைத்தியசாலையில் சமூகம் கொடுக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம்கட்ட நோயாளர்கள் 18ம் திகதி குமண கப்பலில் அழைத்துச்செல்லப்படுவர்.

நோயாளர்கள், உதவியாளர் இரண்டுநாட்களுக்குத் தேவையான மருந்து, குடிநீர் உணவு, ஆகியவற்றினையும் எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். இக்கப்பலில் முதற்கட்டமாகவும் இரண்டாம் கட்டமாகவும் 196 நோயாளர்கள் செல்கின்றனர். 56-சி)

## தமிழரின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பல நூற்றாண்டு காலமாக எம்மக்கள் அந்நிய ஆதிக்கத்தின்கீழ் வாழ்ந்தவர்கள் அந்நியர்கள் தமது மேம்பாட்டுக்கேற்றவகையில் கல்விக்கொள்கையை உருவாக்கினர். இக் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும். எமது வளங்களை மேம்படுத்தும் வகையில் கல்வித்திட்டம் உருவாக்கப்படவேண்டும்

எமது படித்த பரம்பரை மேலைநாடுகளில் தமது மூளை வளத்தை பயன்படுத்துகிறது. உலக முதலாளித்துவம் 3ம் மண்டலநாடுகளிலிருந்து மூளை வளங்களை சுரண்டிக்கொண்டிருக்கிறது. எமது மண்ணில் பாண்டியத்தியம் பெற்றவர்களையே மேற்குலகம் சுரண்டி எடுக்கிறது.

எமது கல்வி எமது மக்களின் தேசியநலனுக்காகவே பேணப்படவேண்டும். எமது தேசிய நிர்மாணத்திற்கு பக்கபலமாயிருக்க வேண்டும். விடுதலை இயக்கம் கல்விக்கு உறுதுணையாயிருப்பது போல் கல்விமான்களும்போராட்டத்திற்கு உழைக்க வேண்டும். போராளிகள் உங்கள் குழந்தைகள்.

போராளிகள் தங்கள் சுகங்களை, ஆசைகளை, அபிலாஷைகளை துறந்து போராட வருகின்றனர். உலகில் ஒருசிலர்தான் இவ்வாறு அதியுன்னத தியாகத்திலீடுபடுபவர்கள் நாம் மாணவர் சமுதாயத்தையும் போராளிகளையும் அரவணைக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கும் அதற்கான கட்டமைப்புகளை இயக்கம் உருவாகி வருகிறது. இதற்கு கல்விமான்கள் தம்மாலியன்ற ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்யவேண்டும் என்றார். [159-சி]

## சட்டப்பேரவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்குப் புறம்பான முறையில் நடத்துவதற்கு ஆட்சேபம் தெரிவித்தே சட்டப்பேரவையை புறக்கணிப்பதாக தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக சட்டப்பேரவை மீண்டும் கூடும்நாள் அறிவிக்காது நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## 62 மாணவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இட்ட பாராட்டுச் சான்றிதழ்களையும் தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான பணப் பரிசில்களையும் திரு. பிரபாகரனின் சார்பில் திரு தமிழ்ச்செல்வன் வழங்கிக் கௌரவித்தார். (வி-ரி)

# ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப்பகுதி முகாமிலிருந்து கிளாலிக் கடற்பகுதியை நோக்கி நேற்றுமுன்தினமிரவு 8 15 மணியளவில் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

படையினர் மேற்கொண்டிருந்த ஷெல் தாக்குதலுக்கு மத்தியிலும் கிளாலியிலிருந்து பயணிகள் ஆலங்கேணி நல்லூர்ப் பகுதி நோக்கிப் புறப்பட்டனர். (56)

## 7 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் அப்பியாசக் கொப்பிகளுக்கான தட்டுப்பாடு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. [159]

## இராணுவம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

குச் சென்றுகொண்டிருந்த தமிழ் மாணவிகள் மீது இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்த மாணவி பலியானதுடன் பலர் படுகாயமடைந்துள்ளார்கள். (வி-ரி)

## கேரதீவு சங்குப்பிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமாக இருந்தால் அப்பகுதியிலிருந்து இராணுவத்தை வாபஸ்பெறமுடியாது என்றும் இராணுவத்தினர் ஊடாகவே பொதுமக்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்று அரசு தெரிவித்துள்ளதாக ஐ. நா. அதிகாரிகள் புலிகளிடம் தெரிவித்தனர் அரசின் இந்த யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டதுடன் மாற்று யோசனை ஒன்றை முன்வைத்தனர்.

சங்குப்பிட்டிபாதையிலிருந்து இராணுவம் வாபஸ்பெறுவிட்டால் கிளாலி கடற் பிரதேசத்தில் விதிக்கப்பட்டுள்ள தடையை அரசு நீக்கவேண்டும் என்று விடுதலைப்புலிகள் புதிய யோசனைத் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் இந்த புதிய யோசனையை இன்று கொழும்பு சென்றதும் அரசிடம் தெரிவிப்பதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமாலை நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் சார்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரும் ஐ. நா. உயர் ஸ்தானிகராலய தலைமைச் செயலக அதிகாரி திரு. ருட்டர், யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வி-ரி)

# கிரிக்கெட்: இங். 221-7

(சென்னை)

இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்குமிடையில் சென்னையில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 3ம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இங்கிலாந்துதனது முதல் இன்னிங்சில் 7விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

இந்தியா முதல் இன்னிங்கில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 560ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## சைக்கிள்- ஆட்டோ விபத்து

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த இளம் பெண்மணி ஒருவர் வயற்பரப்புக் கிணற்றுக்குள் சைக்கிள் றிச்சோவுடன் வீழ்ந்து பலத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் கட்டுடையில் இடம் பெற்றுள்ளது. சைக்கிள் றிச்சோவை சாரதி ஓட்டி வந்தபோது சைக்கிள் செயின் அறுந்தபோது கட்டுப்பட்டிற்குள் சைக்கிலை கொண்டு வர முடியாத நிலையில் சாரதியும் இளம் பெண்ணும் வயற்பரப்பிலுள்ள கிணற்றில் வீழ்ந்தனர். (56-சி)

## ஒய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கி மேற்தரக்கிளையில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு பெப்ரவரி மாத ஒய்வூதியம் நாளை திங்கட்கிழமையும், 16-ந் திகதியும் பணமாக வழங்குவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் மேற்தரக்கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராசா தெரிவிக்கின்றார். (சி)

## கிராமசேவையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் வரவுள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இவர் இங்கு வந்துசேருவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையைச்சார்ந்த அதிகாரியாகிய திரு சபாபதிப்பிள்ளை அவர்களே இவ்வாறு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [157]

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் பேரம்பலம்

வட்டுக்கோட்டை டச்சு வீதியைச்சேர்ந்த இராமலிங்கம் பேரம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர்) காலமானார். அன்னார் வள்ளியாச்சியின் அன்புக்கணவரும், திருமதி மு. கமலநாயகி, திருமதி ந. புவனநாயகி, கிருஷ்ணபாலன் (டென்மார்க்), ஜெயபாலன் (நீர்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மு க. முருகையா (கூ. உ. ஆணையாளர் - முல்லைத்தீவு), திரு. ந. நடராசா, திருமதிகள் ஜோதிமலர், சரோசாமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி இராசசிவம் ரமணி, திரு. மு. உதயகுமார், செல்விகள் ந. சுகந்தினி, ந. சுபாசினி, ந கதர்சினி, கி. பிரதீபன், கி. பிரசன்னா, ஜெ பிரியா, ஜெ கமலகுமார், ஜெ. கௌசல்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று ஞாயிறு (14-02-93) பி. ப. 1 00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(கி 7230)

தகவல்:
இ. கு. சிவஞானம்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, SriLanka under Licence Nnmber B/10336/B

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# 31-ம் நாள் நினைவு அழைப்பு

## கடற்புலி லெப். அமுதன்

[அலோசியஸ் ஜான்சன்]

15-02-93 திங்கள் பிற்பகல் 4 மணியளவில் பரலோக மாதா தேவாலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையிலும், தொடர்ந்து வீட்டில் நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைத்து போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

7/7, 2-ம் குறுக்குத் தெரு
நாவாந்துறை.

-பெற்றோர்.

(சி- 5959)

# 45-ம் நாள் நினைவஞ்சலி

வீரப்பிறப்பு: 22 – 08 – 1973



வீரச்சாவு: 01 – 01 – 1993

## லெப். வெள்ளைத்தேவன்

(நாகசபை கட்சன் ஜெயதாசன்)

அணையாத அகல்விளக்கே அன்பான ஜெயதாசனே
துணையாகத் தமிழ்த்தாயின் துயர்துடைக்கச் சென்றவனே
இணையேதும் இல்லாமல் ஈழத்தாய் நினைவோடு
அணையாத கனவுகளை உளத்திருத்திச் சென்றாயே.

14 02 93 இன்று 45ஆம் நாள் நினைவு நிகழ்ச்சியிலும், மதிய போசனத்திலும் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவோடு வாழும்.

— அப்பா, அம்மா
(திரு. திருமதி கட்சன்)
சகோதரி, தம்பிமார்,
அம்மம்மா, பெரியம்மா,
மாமன்மார், சின்னம்மா, மச்சான்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.

4273)

# இடைக்கால தேர்தல் இல்லை

(டில்லி)

நாட்டின் எதிர்கால நலன்களை மனதில் கொண்டு இடைக்காலத் தேர்தல்கள் எதுவும் நடத்தப்பட மாட்டாது என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார். திரிபுரா மாநிலத்தில் பல்வேறு இடங்களிலும் பொதுக் கூட்டங்களில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமது அரசு ஐந்தாண்டு காலமும் பதவி வகிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## உணவு பங்கீட்டுஅட்டை மீள் பரிசீலனை

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அ. உ. உணவுப் பங்கீட்டு அட்டைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் கிராமசேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. அ. உ. உணவுப்பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்போர் தமது உணவுப்பங்கீட்டுஅட்டைகளை மீள்பரிசீலனை செய்து புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.ச. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். (25]

## அடுத்தவார இறுதியில் கப்பலொன்று வரும்

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று புறப்படவுள்ளதாகவும், இது அடுத்தவார இறுதியில் பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கரண்டிகள் திருட்டு

ஏயார் லங்கா விமான நிறுவனத்திற்கு சொந்தமான உணவு பரிமாறும் கரண்டிகள் திருடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதிமிக்க கரண்டிகள் கப்பைகள் மற்றும் முள்ளுக் கரண்டிகள் என்பனவும் அடங்கும் என்று தெரியவருகிறது.

# இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

வட–இலங்கை சர்வோதயத்தினரின் ஆதரவில்

## ஆறாம் நாள் நிகழ்ச்சிகள்

## 14 – 2 – 93 (ஞாயிறு) இன்று

தியாகராஜ உற்சவம்

காலை 9.00 — 9.15 மங்கள விளக்கேற்றல்

திரு. ஆ சிவரத்தினம் (சிற்பாசாரியார்)
திரு. ம. சிவலிங்கம் (வர்த்தகர்)

தலைவர்: கே. திருநாவுக்கரசு (வட இலங்கை சர்வோதயம்)

சிறப்பு விருந்தினர்: க. கணேசமூர்த்தி (மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி)

9.30 — 11.00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| கே எம். பஞ்சாபிகேசன் | கே. பழனி மலை |
| என் கே. பதமநாதன் | கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. நித்தியானந்தன் |
| எஸ் எஸ். சிதம்பரநாதன் | பி. உமைசங்கர் |
| வி. கே. கானமூர்த்தி | பி.ரவி, ஆர் எஸ் ரவீந்திரன் |
| வி கே. பஞ்சமூர்த்தி | ஆர் எஸ் சுதாகரன் |
| என். கே. கணேசன் | பி. கணேசன், ஆர் பாஸ்கரன் |
| எம். பி நாகேந்திரன் | கே வீராச்சாமி, |
| என் வேதீஸ்வரன் | எஸ் ஜெயராமன் |
| பி. ரஜி | பி முருகதாஸ், என். ராமதாஸ் |

11.00 — 12.00 பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்

முதுகலைஞர்களும், இளங்கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

12.00 மதிய போசனம்

மாலை

யாழ். வர்த்தக சங்கத்தின் ஆதரவில்

"தியாகராஜ கீர்த்தனாஞ்சலி"

மாலை 3.00 — 4.00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| கே. நாகராசா | என். கே விவேகானந்தன் |
| வி. ஜெகந்நாதன் | எஸ். விஜயகுமார் |
| எம். நாராயணசாமி | எஸ். கண்ணன் |
| என். யோகநாதன் | எஸ். நடராஜசுந்தரம் |

4.00 — 4.45 பாட்டு யசோதா கந்தசாமி
வயலின்: பாக்கியலக்ஷ்மி நடராஜா
மிருதங்கம்: எஸ். அமரராஜா

4.45 — 5.30 பாட்டு வி. பரமசாமி
வயலின்: எஸ் வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

5 30 — 6.15 பாட்டு பரமேஸ்வரி கணேசன்
வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

இரவு: 6 15 — 6 30 மங்கள விளக்கேற்றல்

திரு: சு. செல்வரத்தினம், விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், 'ஈஸ்வர பவான்' (வின்னன்)

திரு த. வைத்திலிங்கம் (வர்த்தகர்)

தலைவர்: திரு. வி. சிற்சபேசன் தலைவர் யாழ். வர்த்தகசபை)

சிறப்பு விருந்தினர் திரு க. குணராஜா (யாழ் உதவி அரசாங்க அதிபர்)

6.30 — 7.15 பாட்டு என். ஸ்ரீரங்கநாதன்
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

7.15 — 8.15 வில்லிசை

ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்கும் "சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்"

8.15 — 9.15 பரதநாட்டியம்

'நாட்டிய விசாரத்' விக்னேஸ்வரி-சரவணமுத்து, (கலாக்ஷேத்திரா]
ருக்மிணி நர்த்தனாலய மாணவிகளும்
நட்டுவாங்கம்: கிரிஷாந்தி - ரவீந்திரா
பாட்டு: சாரதா - சச்சிதானந்தம்
வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்

வாழ்த்துவோர் :

## ரூபன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

(சி-5965)

# உனது 6-ம் ஆண்டு நிறைவில் / உனது 3-ம் ஆண்டு நிறைவில


## எமது விழிகள் சிந்தும் அஞ்சலி



### மேஜர் கேடில்ஸ்

[மகாலிங்கம் திலீபன்]

தாய் மடியில்
14-05-1966
தமிழீழ மண்ணில்
14-02-1987



### மேஜர் காண்டீபன்

[மகாலிங்கம் காண்டீபன்]

தாய் மடியில்
14-06-1970
தமிழீழ மண்ணில்
07-08-1990

சினம் கண்டாய் சினம் கொண்டாய் நொடிப்பொழுதில் பகைவென்றாய்.
மனங் கொண்டாய் தமிழீழ விடுதலையின் முனைப்பானாய்
துடிதுடித்த உன்கரத்தில் துவக்கை ஏந்தி பொடிப்பொடியாய் எதிரிகளை
தவிடு பொடி ஆக்கி நின்றாய் மேஜர் கேடில்ஸ் உன் புகழின் பெருமைதனை
சொல்கின்ற இதழ்களெல்லாம் இனிப்பெடுக்கும் நெஞ்சினிலே வீரம்பாய்ச்சும்
சிங்களத்தின் படைகளுக்கோ குலைநடுங்கி காய்ச்சல் ஆக்கும்
உன் தம்பி காண்டீபனும் உன்வழியினில் வீறுநடைபோட்டான்
நீங்கள் இருவருமே பாசமுறும் வாடாத மல்லிகையாய் எம் இதய அறையினிலே வாழ்வீர்கள்

-- குடும்பத்தினர்

காண்டிவாசா,
கண்டாவளை.


(4271)

# 6ஆம் ஆண்டு வீரவணக்கம்

**14.2.1987-ம் ஆண்டு நாவற்குழி சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்புக்காக உருவாக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி தவறுதலாக வெடித்ததில் வீரச்சாவடைந்த பத்து வேங்கைகளுக்கு வீரவணக்கத்தையும், இச்சம்பவத்தில் உயிர் நீத்த பொதுமக்களுக்கு நினைவஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.**




கப்டன் வாசு
(உருத்திராபதி சுதாகர்)
வல்வெட்டித்துறை





வீரவேங்கை தேவன்
(தம்பிப்பிள்ளை வசந்தகுமார்,
மீசாலை



லெப். சித்தார்த்தன்
(வைத்திலிங்கம் வசிகரன்)
சுண்டுக்குளி

லெப். கேணல் பொன்னம்மான்
(யோகரத்தினம் குகன்)
யாழ்ப்பாணம்



வீரவேங்கை குமணன்
(கந்தையா மோகனலிங்கம்)
மட்டுவில்



2ம் லெப, பரன்
(கிருஷ்ணன் அருச்சுனன்)
வல்வெட்டித்துறை





வீரவேங்கை அக்பர்
(அருளம்பலம் யோகநாதன்)
மட்டுவில்



வீரவேங்கை யோகேஸ்
(சுந்தரம் தனபாலசிங்கம்)
தாளையடி

மேஜர் கேடில்ஸ்
(மகாலிங்கம் திலீபன்)
கண்டாவளை



வீரவேங்கை சுவர்
(கதிர்காமு நகுலேஸ்வரன்)
வவுனியா

**14. 02. 1993 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-00 மணிக்கு கைதடி வடக்கில் நினைவுக்கல் திறந்து வைக்கப்படும். இந்நிகழ்விற்கு அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.**

(சி-6019)

**- தென்மராட்சி மக்கள்**